**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**முன்னிலை : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

2025 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 19–ம் நாள் வெள்ளிக்கிழமை

**இடைக்கால மனு எண். 2/2025**

**in**

**அசல் வழக்கு எண். 3/2025**

மலைக்கொழுந்து .... மனுதாரர்/வாதி

**//எதிர்//**

1. பெரியசாமி
2. வைரப்பெருமாள் .... எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இந்த மனு, கடந்த 11.09.2025 அன்று இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. D.கவின்குமார் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.V.தியாகு அவர்கள் முன்னிலையாகியும், இரு தரப்பு வாதங்களை கேட்டும், ஆவணங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**உத்தரவு**

இந்த மனு, மனுதாரர்/வாதியால் உரிமையியல் விசாரணை நடைமுறைச்சட்டம் கட்டளை 39 விதி 1 மற்றும் 2 ன் கீழ் மனு சொத்தில் மாதிரி வரைபடத்தை தவிர சிவப்பு வண்ணமிட்ட பகுதியில் நடந்து சென்று அனுபவம் செய்து வருவதையும், மஞ்சள் வண்ணமிட்ட பகுதியில் எவ்வித ஆக்கிரமிப்பு செய்யாமல் இருக்க அசல் வழக்கு முடியும் வரை இடையூறு செய்யக் கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்குமாறு கோரியுள்ளார்.

**2) மனுதாரர் தரப்பு மனுவின் சுருக்கம்:–**

மனு சொத்து ஆதியில் பிரதிவாதிகளின் தகப்பனார் சோழன்முத்திரையிர் என்பவருக்கு பாத்தியப்பட்டு வாரிசின் அடிப்படையில், வழக்கின் பிரதிவாதிகள் மற்றும் ராஜலிங்கம், தங்கராஜ் ஆகியோர்களுக்கு கடந்த 1982 ம் வருடத்தில்

ஏற்பட்ட பாகப்பிரிவினை பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்டு அதன் அடிப்படையில், பிரதிவாதிகள் மற்றும் ராஜலிங்கம், தங்கராஜ் ஆகியோர்களிடமிருந்து வாதி கடந்த 18.05.1998 அன்று கிரையம் பெற்றார்.

**2.1)** மனு சொத்தானது, திருக்காம்புலியூர் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.387/1C4 ஏக்.01.30 செண்ட் பெரியக்காள் நிலத்திற்கும் கிழக்கு, ரத்தினகிரி நிலத்திற்கும் தெற்கு, மலையாண்டி நிலத்திற்கும் மேற்கு, பிரதிவாதிகள் மற்றும் ராஜலிங்கம் தங்கராஜ் இதர நிலத்திற்கு வடக்கு, ஏக்.1.00 செண்ட் நிலமும் இதை சேர்ந்த சுற்றுக்காழ் பொலி தருசும் மாமூல் தடை நடை பாதை பாத்தியம் அதாவது, மேற்படி நிலத்தின் மேல்புற ஓரம் வாதியின் இதர நிலத்தின் வழியாக நடந்து கொள்ளும் பாதை உள்பட கண்டு கிரையப் பத்திரம் எழுதப்பட்டுள்ளது. மேற்கண்ட பாதை மாதிரி வரைபடத்தில், சிவப்பு வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ளது.

**2.2)** மனு சொத்தை கிரையம் பெற்றது முதல் வாதி தொடர்ந்து சுவாதீனம் எடுத்து வீடு கட்டி குடியிருந்து வருகிறார். கீழ்புறத்தில் தென்னை மரங்கள் வளர்த்தும், ஆடு, மாடு கட்டி வளர்த்தும் அனுபவம் செய்து வருகிறார். பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது.

**2.3)** வாதிக்கு கிரையம் கொடுத்த ராஜலிங்கம் இறந்துவிட்டார். தங்கராசு என்பவர் எந்த இடையூறும் செய்யவில்லை. அதனால், அவரை தரப்பினராக சேர்க்கவில்லை.

**2.4)** தோராய வரைபடத்தில், சிவப்பு வண்ணமிட்ட பாதையின் வழியாக வாதி நடந்து அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகள் பல வழிகளில் தொடர்ந்து இடையூறு செய்து வருகிறார். பிரதிவாதிகளின் செயல் சட்டவிரோதமானதாகும். மேலும், மனு சொத்திற்கு தென்புறம் கிழமேல் சுமார் 3 அடி அகலத்திலும், 60 அடி நீளத்திலும் குழிபறித்து ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டார்கள். ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்ட பகுதி தோராய வரைபடத்தில் மஞ்சள் வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ளது.

**2.5)** கடந்த 10.01.2025 அன்று தோராய வரைபடத்தில் சிவப்பு வண்ணமிட்ட பாதை வழியாக வாதி நடந்து சென்றபோது பிரதிவாதிகள் அடாவடியாக தடுத்து இடைஞ்சல் செய்து வந்தார்கள். அதை பொதுமக்களின் உதவியுடன் வாதி தடுத்து விட்டார். அதனால், அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**3) 1ம் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்து 2ம் பிரதிவாதி ஏற்றுக்கொண்ட எதிர் வழக்குரையை இந்த மனுவில் எதிருரையாக கருத மெமோ தாக்கல் செய்யப்பட்டு எதிர்வழக்குரையின் சுருக்கம்:–**

**3.1)** அசல் தாவாவில் குறிப்பாக ஒப்புக்கொள்ளும் சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகள் மறுக்கப்படுகிறது. வாதியே நிரூபிக்க கடமைப்பட்டவர். வாதி கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல.

**3.2)** வழக்குரை பத்தி 3ல் உள்ள சங்கதிகளை வாதி நிரூபிக்க வேண்டும். தாவா சொத்து பிரதிவாதிகளின் தந்தை சோழன்முத்தரையருக்கு பாத்தியப்பட்டது என்றும், அவரின் வாரிசு தாரர்கள் ராஜலிங்கம், தங்கராசு, பிரதிவாதிகள் கடந்த 1982 ம் வருடம் பாகம்பிரிவினை மூலம் பாகம் பிரித்து கடந்த 18.05.1998 அன்று வாதிக்கு விற்பனை செய்ததாக சொல்வது பொய்யானதாகும்.

**3.3)** மனு சொத்தானது, திருக்காம்புலியூர் கிராமம், அயன் புஞ்சை சர்வே எண்.387/1C4 ஏக்.01.30 செண்ட் பெரியக்காள் நிலத்திற்கும் கிழக்கு, ரத்தினகிரி நிலத்திற்கும் தெற்கு, மலையாண்டி நிலத்திற்கும் மேற்கு, பிரதிவாதிகள் மற்றும் ராஜலிங்கம் தங்கராஜ் இதர நிலத்திற்கு வடக்கு, ஏக்.1.00 செண்ட் நிலமும் இதை சேர்ந்த சுற்றுக்காழ் பொலி தருசும் மாமூல் தடை நடை பாதை பாத்தியம் அதாவது, மேற்படி நிலத்தின் மேல்புற ஓரம் வாதியின் இதர நிலத்தின் வழியாக நடந்து கொள்ளும் பாதை உள்பட கண்டு கிரையப் பத்திரம் எழுதப்பட்டுள்ளது. மேற்கண்ட பாதை மாதிரி வரைபடத்தில், சிவப்பு வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ளது என்பது பொய்யானதாகும்.

**3.4)** மனு சொத்தை கிரையம் பெற்றது முதல் வாதி தொடர்ந்து சுவாதீனம் எடுத்து வீடு கட்டி குடியிருந்து வருகிறார். கீழ்புறத்தில் தென்னை மரங்கள் வளர்த்தும், ஆடு, மாடு கட்டி வளர்த்தும் அனுபவம் செய்து வருகிறார். பட்டாவும் வழங்கப்பட்டுள்ளது என்பது பொய்யானதாகும்.

**3.5)** பிரதிவாதிகள் வாதியின் பாதையை பயன்படுத்துவதை இடையூறு செய்தார்கள் என்பதும், பொய்யானது. தோராய வரைபடத்தில், சிவப்பு வண்ணமிட்ட பாதையின் வழியாக வாதி நடந்து அனுபவம் செய்து வருவதை பிரதிவாதிகள் பல வழிகளில் தொடர்ந்து இடையூறு செய்து வருகிறார்.

பிரதிவாதிகளின் செயல் சட்டவிரோதமானதாகும் என்பதும் மேலும், மனு சொத்திற்கு தென்புறம் கிழமேல் சுமார் 3 அடி அகலத்திலும், 60 அடி நீளத்திலும் குழிபறித்து ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்டார்கள் என்பதும் ஆக்கிரமிப்பு செய்ய முற்பட்ட பகுதி தோராய வரைபடத்தில் மஞ்சள் வண்ணமிட்டு காட்டப்பட்டுள்ளது என்பது பொய்யானது.

**3.6)** கடந்த 10.01.2025 அன்று தோராய வரைபடத்தில் சிவப்பு வண்ணமிட்ட பாதை வழியாக வாதி நடந்து சென்றபோது பிரதிவாதிகள் அடாவடியாக தடுத்து இடைஞ்சல் செய்து வந்தார்கள். அதை பொதுமக்களின் உதவியுடன் வாதி தடுத்து விட்டார். அதனால், அசல் வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது பொய்யானது. பிரதிவாதிகள் சிவப்பு வண்ணமிட்ட பாதையை இடையூறு செய்தார்கள் என்பதும், மஞ்சள் வண்ணமிட்ட பாதையை ஆக்கிரமிப்பு செய்ய முயற்சி செய்கிறார்கள் என்பதும் பொய்யானது.

**3.7)** வாதி நிலத்திற்கும், பிரதிவாதிகள் வீட்டிற்கும் இடையில் தோராய வரைபடத்தில் குறிப்பிட்டுள்ளது போல் பாதை இல்லை. பிரதிவாதிகள், நிலத்தின் கிழக்குபுறம் 3 அடி அகலத்தில் பாதை உள்ளது அது புல வரைபடத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. வாதி தோராய வரைபடத்தில், மஞ்சள் நிறம் காட்டப்பட்ட பகுதியில் எந்த பரிகாரமும் பெற தக்கவர் அல்ல. மஞ்சள் வண்ணமிட்ட பாதை பூஸ்துதியில் இல்லை. பிரதிவாதிகளின் சகோதரர் தங்கராஜ் என்பவர் அவரது சொத்துக்களை ராமசாமி மற்றும் பழனியாண்டி ஆகியோர்களுக்கு விற்பனை செய்துள்ளார். அதனால், ராமசாமி மற்றும் பழனியாண்டி இவ்வழக்கிற்கு அவசிய தரப்பினர்கள் ஆவார்கள். கிரையப் பத்திரத்தில், 4 எல்லைகள் எங்கள் இதர நிலத்திற்கு வடக்கு என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது. மஞ்சள் நிறமிட்ட பகுதி கற்பனையானது. பிரதிவாதிகளின் இடத்தை ஆக்கிரமிப்பு செய்வதற்காக அவ்வாறு காட்டப்பட்டுள்ளது. அதனால் மனு தள்ளுபடி செய்ய வேண்டும்.

**4)** இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் முன்னிலைப்படுத்தப்படவில்லை. வாதி தரப்பில் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.4 வரையிலான ஆவணங்கள் மனுவில் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதிகள் தரப்பில் ஆவணம் குறியீடு செய்யவில்லை.

5) இந்த மனுவில் **தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சனை என்னவென்றால், மனுதாரர் கோரியுள்ள இடைகால உறுத்துக்கட்டளை மனுதாரருக்கு கிடைக்கத்தக்கதா? இல்லையா?** என்பதே ஆகும்.

6) மனுதாரர்/வாதி தரப்பு வழக்கறிஞர் தனது வாதத்தில், தாவா சொத்து அம்சங்களை காட்டக்கூடிய தோராய வரைபடம் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், தாவா சொத்தை கிரையம் பெற்ற கிரையப்பத்திரம் ம.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், பட்டா ம.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், புல வரைபடம் ம.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றும், தோராய வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள சிவப்பு நிற வண்ணமிட்ட பாதையை மற்றும் மஞ்சள் நிறமற்ற பாதையை பிரதிவாதிகளிடமிருந்து ம.சா.ஆ.2 பத்திரத்தின் மூலம் கிரையம் பெற்று அனுபவம் செய்து வருவதாகவும், அதற்கு பட்டா வழங்கப்பட்டுள்ளதாகவும் தற்பொழுது பிரதிவாதிகள் மேற்குபுறம் அமைந்துள்ள சிவப்பு வண்ண நிறமிட்ட பாதையை வாதி பயன்படுத்துவதை இடையூறு செய்து வருவதாகவும், மஞ்சள் நிறம் வண்ணமுடைய பகுதி குழிப்பறித்து ஆக்கிரமிப்பு செய்ய முயன்று வருகிறார்கள் என்றும், அதனால் அசல் வழக்கு முடியும் வரை இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்க வேண்டும் என்று வாதிட்டார்.

7) எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் வாதிட்ட கற்றறிந்த வழக்கறிஞர் தனது வாதத்தில், மேற்குபுறம் சிவப்பு நிறத்தில் காட்டப்பட்டுள்ள பாதையில் வாதி சென்று அனுபவம் செய்து வந்தது பிரதிவாதிகளுக்கு எந்த பிரச்சனையும் இல்லை என்றும், எப்போதும் இடையூறு செய்வதில்லை என்றும், ஆனால் மஞ்சள் நிற வண்ணமிட்ட பகுதி இருப்பதாகவும், வாதி பொய்யாக வழக்கில் சொல்லியுள்ளார் என்றும், மஞ்சள் நிற வண்ண பகுதி பூஸ்துதியில் இல்லை என்றும், சிவப்பு நிற வண்ணமிட்ட பகுதி வழியாக வாதியின் வீடு மற்றும் காலி மனையை அடைய முடியும் என்றும், சிவப்பு நிற பாதையை மட்டும் தான் வாதிக்கு ம.சா.ஆ.2 கிரையப் பத்திரம் மூலம் விற்பனை செய்துள்ளதாகவும், வாதி அவருக்குடைய இடத்தை தற்போது ரியல் எஸ்டேட் பிளாட் போட்டு விற்பதற்கு நடவடிக்கை எடுத்து வருவதாகவும், அவருடைய இடத்தில் பாதையிட்டால் இடத்தின் அளவு குறையும் என்பதால், பிரதிவாதிகளின்

இடத்தில் பாதையிருப்பதாக பொய்யாக கூறி பிரதிவாதிகளின் இடத்தை வழக்கின் மூலம் ஆக்கிரமிப்பு செய்ய முயல்கிறார் என்றும், வாதி கிரையம் பெற்ற இடத்தையும், பிரதிவாதிகளின் இடத்தையும் தகுதி வாய்ந்த சர்வேயர் மூலம் அளவீடு செய்தால் மஞ்சள் நிற பகுதி இல்லை என்பது தெரிய வரும் என்பதும், புல வரைபடத்திலும் மஞ்சள் நிற பகுதி காட்டவில்லை என்றும், அதனால் மனுவை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் வாதிட்டார்.

8) வாதி தரப்பில் தாக்கல் செய்துள்ள தோராய வரைபடம் ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேற்படி, வரைபடத்தில் பிரதிவாதிகளின் மனை தெற்குபுறத்திலும், வாதிகளின் வீடு மற்றும் காலி மனை வடக்குபுறத்திலும், காட்டப்பட்டுள்ளது. பிரதிவாதிகளின் இடத்தில் மேற்குபுறம் சிவப்பு கோடிட்ட பாதை காட்டப்பட்டுள்ளது. மேற்படி, பாதையை பிரதிவாதிகள் மறுக்கவில்லை. மேற்படி, பாதையில் இடையூறு செய்யவில்லை என்றும், குறிப்பிடப்பட்டுள்ளது. வாதியின் இடத்திற்கும், பிரதிவாதியின் இடத்திற்கும் இடையில் மஞ்சள் நிறமுடைய கிழக்கு மேற்காக காட்டப்பட்ட பகுதி பிரதிவாதிகள் ஆக்கிரமிப்பு செய்ய முயல்வதாக மனுவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

9) ம.சா.ஆ.2, 18.05.1998 ம் தேதியிட்ட கிரையப் பத்திரம் மேற்படி கிரையப் பத்திரத்தில் வாதிக்கு சர்வே எண்.387/1C ல் விற்பனை செய்த நிலத்தை பிரதிவாதிகள் மறுக்கவில்லை. மேலும், மேற்படி பத்திரத்தில் பாதைக்கு சுற்றுக்காழ் பொழி தரிசு மாமூல் தடைநடை பாத்தியம் அதாவது மேற்படி நிலத்தின், மேல்புறம் ஓரத்தில் எங்கள் இதர நிலத்தின் வழியாக தங்கள் நடந்து கொள்ளும் பாத்தியம் உட்பட. கிரையச் சொத்து என்று குறிப்பிடப்பட்டுள்ளது. ம.சா.ஆ.2 ஆவணத்தில், வாதி தாக்கல் செய்துள்ள ம.சா.ஆ.1 ஆவணமான தோராய வரைபடத்தில் பிரதிவாதிகளின் நிலத்திற்கு மேற்குபுறமுள்ள சிவப்பு நிறமிட்ட பகுதி தான் விற்கப்பட்டுள்ளது தெரிய வருகிறது. பிரதிவாதிகளின் இடத்திற்கும், வாதிகளின் இடத்திற்கும் இடையே கிழமேலாக உள்ள மஞ்சள் நிற பகுதி ம.சா.ஆ.2 கிரையப் பத்திரத்தில் குறிப்பிடவில்லை. அதனால், மேற்படி மஞ்சள் நிற பகுதி பூஸ்துதியில் உள்ளதா என்ற சந்தேகம் எழுகிறது. பிரதிவாதிகளின் இடத்திற்கு மேல்புறம் உள்ள தென்வடல் பாதையில் சென்றால் வாதிகளின் முழு சொத்தையும் அடைய முடியும். அவ்வாறு இருக்க வாதியின் நிலத்திற்கும், பிரதிவாதிகளின் நிலத்திற்கும் இடையே கிழமேலாக மஞ்சள் நிற

பகுதி உள்ளதா? இல்லையா? என்பது தெரியும். ஒருவேளை வாதியின் இடத்தையும், பிரதிவாதியின் இடத்தையும் தகுதி வாய்ந்த சர்வேயர் மூலம் அளந்தால் இரு தரப்பினர்களின் இடங்களின் இடையே காலியிடம் இருந்தால் அதை காலியிடமாக கருத முடியும். காலியிடம் உள்ளதா இல்லையா என்பதை இந்த மனுவில் தீர்மானிக்க முடியாது.

**10)** ம.சா.ஆ.3 பட்டா எண்.1145 இணையவழி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். மேற்படி, ஆவணத்தை உற்றுநோக்கும்போது புல எண்.387/1C4B ஆனது சோழன், பெரியசாமி, வைரப்பெருமாள், ராஜலிங்கம் மற்றும் தங்கராசு ஆகியோர் பெயரில் கூட்டு பட்டா ஏற்பட்டுள்ளது. மேற்படி ஆவணத்தில், பாதையை பற்றி எந்த விவரமும் இல்லை.

**11)** ம.சா.ஆ.4, சர்வே எண்.387 ல் புல வரைபடம் இணையவழி பதிவிறக்கம் செய்யப்பட்ட நகல். மேற்படி, ஆவணத்தில் 387/1C4B ல் மேற்குபுறம் பாதை காண்பிக்கப்பட்டுள்ளது.

**12)** பிரதிவாதிகள் தரப்பில், ம.சா.ஆ.1 தோராய வரைபடத்தில் பிரதிவாதிகளின் இடத்தின் மேற்குபுறம் சிவப்பு வண்ணமிட்ட தென்வடல் பாதை இருப்பதாக ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. மேலும், மேற்படி பாதை வாதியால் கிரையம் பெற்றது ம.சா.ஆ.2 கிரையப்பத்திரம் மூலம் நிரூபிக்கப்பட்டுள்ளது. ஆனால், பிரதிவாதி இடத்திற்கும், வாதியின் இடத்திற்கும் இடையில் கிழமேலாக மஞ்சள் நிறமிட்டு காட்டப்பட்டுள்ள பகுதி உள்ளதாக வாதி தரப்பில் நிரூபிக்கவில்லை. பிரதிவாதிகள் மேற்படி, பகுதியை மறுத்துள்ளார்கள். மேற்படி, மஞ்சள் நிறமிட்ட கிழமேல் பகுதி உள்ளதா இல்லையா என்று இந்த மனுவில் தீர்மானிக்க முடியாது. ஒருவேளை வாதி மற்றும் பிரதிவாதிகளின் இடத்தை அளவீடு செய்தால் இரு தரப்பினர்களின் இடங்களின் இடையே மீதி காலி நிலம் இருந்தால் அது அந்த பகுதியாக கருத நேரிடலாம். மஞ்சள் நிறமிட்ட கிழமேல் பகுதி இருப்பதாக வாதி தரப்பில் தற்பொழுது நிரூபிக்கவில்லை என்பதால், மஞ்சள் நிறமுடைய பகுதி பொறுத்து வாதி கோரியுள்ள இடைக்கால உறுத்துக்கட்டளை கிடைக்கத்தக்கதல்ல என்றும், சிவப்பு வண்ணமிட்ட தென்வடல் பாதைக்கு மட்டும் வாதிக்கு இடைக்கால உறுத்துக்கட்டளை பிரதிவாதிகளுக்கு எதிராக கிடைக்கதக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு

செய்கிறது.

இறுதியாக, மனு பகுதியாக அனுமதிக்கப்படுகிறது. செலவுத் தொகை இல்லை. பிரதிவாதிகள் ம.சா.ஆ.1 தோராய வரைபடத்தில் காண்பித்துள்ள பிரதிவாதிகளின் இடத்தில் மேற்குபுறம் உள்ள தென்வடல் சிவப்பு நிறமுடைய பாதையில் அசல் வழக்கு முடியும் வரை இடையூறு செய்யக்கூடாது என இடைக்கால உறுத்துக்கட்டளை வழங்கப்படுகிறது. தோராய வரைபடத்தில் காண்பிக்கப்பட்டுள்ள பிரதிவாதிகளின் இடத்தின் வடபுறம் உள்ள மஞ்சள் நிற கிழமேல் பகுதியை பொறுத்து மனு தள்ளுபடி செய்து உத்தரவிடப்படுகிறது. மனு உத்தரவுடன் ம.சா.ஆ.1 தோராய வரைபடம் இணைக்க உத்தரவிடப்படுகிறது.

இவ்வுத்தரவானது என்னால் நேரடியாக சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் படித்து சரிபார்க்கப்பட்டு பிழைகள் திருத்தம் செய்யப்பட்டு இன்று 2025 ம் ஆண்டு செப்டம்பர் 19 ம் நாள் அவையறிய பகரப்பட்டது.

**ஒம்/திரு.ஆர்.பாக்கியராஜ்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**கிருஷ்ணராயபுரம்.**

**<u>மனுதாரர் தரப்பு சாட்சிகள் :– இல்லை</u>**

**<u>மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்:–இல்லை</u>**

**<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்</u> – இல்லை.**

**ஒம்/திரு.ஆர்.பாக்கியராஜ்**
**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்**
**கிருஷ்ணராயபுரம்.**